www.Padasalai.Net www.TrbTnpsc.com

# அரசினர் மேல்நிலைப்பள்ளி, பரந்தூர்.

## காஞ்சிபுரம் மாவட்டம்

## பதினோராம் வகுப்பு

# கணக்குப் பதிவியல்

## மாணவர் கையேடு - 2

( கணக்கியல் வினாக்கள் சார்ந்தவை )

www.Padasalai.Net





B. பாலாஜி,
முதுகலை ஆசிரியர் - வணிகவியல்,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
பரந்தூர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 552.
கைப்பேசி எண் : 9629647613


http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

## பாடம் - 3 அடிப்படைக் கணக்கியல் நடைமுறைகள் I

## இரட்டைப் பதிவு முறையில் கணக்கு ஏடுகள் பராமரிப்பு

1. **ஆள்சார்கணக்குகள்:**

i) **தனிமனிதர்சார்புடையகணக்குகள்:**

உதாரணம் : மோகன் க / கு , முருகன் க / கு.

ii) ஆட்களின்குழு அல்லது அமைப்பு அல்லது சங்கம் சார்புடைய கணக்கு.

உதாரணம் : எச்.எம்.டி. லிமிடெட், இந்தியன்ஓவர்சீஸ் வங்கி, ஆயுள்காப்பீட்டுக் கழகம், அரிமாசங்கம் போன்றவை.

iii) ஒருகுறிப்பிட்ட நபரையோ அல்லது குழுவையோ குறிக்கும் கணக்கு:

உதாரணம் : கொடுபட வேண்டிய சம்பளக்கணக்கு, முன்கூட்டி செலுத்திய காப்பீட்டுக் கணக்கு போன்றவை.

**மேலும்உதாரணங்கள்** :

1) முதல் 2. லதா ( மனிதர்களின் பெயர் எது வந்தாலும் )

3. ஸ்டேட்பாங்க் ஆப் இந்தியா ( வங்கி என்று வந்தாலும், வங்கியின் பெயர் வந்தாலும் )

4.கொடுபட வேண்டிய வாடகை 5. எடுப்பு 6. முருகன் வாடகை நிலையம்.

2. **சொத்துகணக்குகள் :**

வணிக நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துகள் மற்றும் உடைமைகள் இதில் அடங்கும். சொத்துக் கணக்கானது புலனாகும் சொத்துகள் மற்றும் புலனாகாச் சொத்துகள் கணக்குகளாக இருக்கும்.

எ.கா : 1. நிலம் 2. கட்டடம் 3. வணிகநற்பெயர் 4. சரக்கு 5. கொள்முதல் 6. விற்பனை 7. ரொக்கம்

www.Padasalai.Net

3. **பெயரளவுகணக்குகள் :**

இக்கணக்குகளுக்கு எவ்வித உருவமும், வடிவமும் கிடையாது. இவைகள் வணிகத்தின் வருமானம் மற்றும் செலவு, ஆதாயம் மற்றும் நட்டம் சார்புடையதாகும்.

எ.கா : 1. சம்பளம் 2. பங்காதாயம் 3. மின்கட்டணம் 4. வாடகை 5. கழிவுப்பெற்றது 6. விளம்பரம்

---

## பாடம்4.அடிப்படைக்கணக்கியல்நடைமுறைகள்II– குறிப்பேடு

**கணக்கியல்சமன்பாடு** :

சொத்துகள் = முதல் + பொறுப்புகள்

எடுத்துக்காட்டு 1

ஒரு தொழிலின் முதல் ₹.3,00,000 ; பொறுப்புகள் ₹.2,00,000 ; தொழிலின் மொத்த மதிப்புகளின் மதிப்பைக் கணக்கிடுக.

| சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|
| ? | = | ₹. 3,00,000 | + | ₹. 2,00,000 |
| ₹. 5,00,000 | = | ₹. 5,00,000 | | |

2. கணக்கியல் சமன்பாட்டில் விடுபட்ட தொகையினைக் காண்க.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | ? | = | ₹.40,000 | + | ₹.11,000 |
| ஆ) | ₹.65,000 | = | ₹. 53,000 | + | ? |
| இ) | ₹.75,000 | = | ? | + | ₹. 42,500 |

விடை:

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | ₹.51,000 | = | ₹.40,000 | + | ₹.11,000 |
| ஆ) | ₹.65,000 | = | ₹. 53,000 | + | ₹.12,000 |
| இ) | ₹.75,000 | = | ₹.32,500 | + | ₹. 42,500 |

## குறிப்பேட்டுப்பதிவு:

1. தொழில் தொடங்க முதல் போட்டது / முருகன் தொழில் தொடங்க முதல் போட்டது
   ரொக்க க / கு ப
   முதல் க / கு
   ( தொழிலில்முதல்போட்டது )

2. கமல் என்பவரிடமிருந்து பெற்ற ரொக்கம்
   ரொக்க க / கு ப
   கமல் க / கு
   ( கமல்என்பவரிடம்ரொக்கம்பெற்றது )

3. கமல் என்பவருக்கு கொடுத்த ரொக்கம்
   கமல் க / கு ப
   ரொக்க க / கு
   ( கமலுக்கு ரொக்கம் வழங்கியது )

4. ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது.
   கொள்முதல் க / கு ப
   ரொக்க க / கு
   ( ரொக்க கொள்முதல் )

5. ரொக்கத்திற்கு சரக்கு விற்றது
   ரொக்க க / கு ப
   விற்பனை க / கு
   ( ரொக்க விற்பனை )

www.Padasalai.Net

6. ராஜா என்பவருக்கு கடனாக சரக்குவிற்றது.
   ராஜா க / கு ப
   விற்பனை க / கு
   ( கடன்விற்பனை )

7. ராஜா என்பவரிடமிருந்து கடனாகசரக்கு வாங்கியது
   கொள்முதல் க / கு ப
   ராஜா க / கு
   ( கடன்கொள்முதல் )

8. மோகனிடமிருந்து சரக்கு திரும்பப் பெற்றது.
   விற்பனைதிருப்ப க / கு ப
   மோகன் க / கு
   (சரக்குதிரும்பியது)

9. மோகன் என்பவருக்கு சரக்கு திருப்பியது.
   மோகன் க / கு ப
   கொள்முதல் திருப்ப க / கு
   (சரக்குதிருப்பப்பட்டது)

10. ஊதியம் வழங்கியது.
    ஊதியம் க / கு ப
    ரொக்க க / கு
    (ஊதியம்வழங்கியது)

11. வாடகை செலுத்தியது.
    வாடகை க / கு ப
    ரொக்க க / கு
    ( வாடகை செலுத்தியது )

12. கழிவு பெற்றது.
    ரொக்க க / கு ப
    கழிவு க / கு
    (கழிவுபெற்றது)

13. வங்கியில் நடப்பு கணக்கு தொடங்கியது.

வங்கி க / கு ப

ரொக்க க / கு

(நடப்புக்கணக்கு தொடங்கியது)

14. வங்கியில் பணம் செலுத்தியது

வங்கி க / கு ப

ரொக்க க / கு

( வங்கியில் பணம் செலுத்தியது )

15. வங்கியிலிருந்து பணம் எடுத்தது.

ரொக்க க / கு ப

வங்கி க / கு

( வங்கியிலிருந்து பணம் எடுத்தது )

16. தன்சொந்த செலவிற்காக ( அதுகாசோலை மூலமாகவோ அல்லது பணமாகவோ ) வங்கியிலிருந்து பணம் எடுத்தது.

எடுப்பு க / கு

ரொக்க க / கு

(எடுப்பு எடுத்தது)

## கூட்டுக்குறிப்பேட்டுப்பதிவு :

ஒரே நாளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நடவடிக்கைகள் நிகழும்பொழுது , அவை ஒரே தன்மையாக இருப்பின், அவற்றைத் தொகுத்து மொத்தப்பற்றுத் தொகையும், மொத்தவரவுத்தொகையும் சமமாக இருக்குமாறு குறிப்பேட்டில் பதிவு செய்வதை கூட்டுக் குறிப்பேட்டுப் பதிவு என்கிறோம்.

( எ.கா ) 1. ஜூன்1, 2004 - அஞ்சுபோட்ட முதல் ₹.50,000 ; மஞ்சுபோட்ட முதல் ₹.70,000

குறிப்பேடு

| நாள் | விவரம் | பே. ப.எ | பற்றுத்தொகை ₹. | வரவுத்தொகை ₹. |
|---|---|---|---|---|
| 2004 ஜூன்1 | ரொக்க க/கு ப<br>அஞ்சு முதல் க/கு<br>மஞ்சு முதல் க/கு<br>(அஞ்சு,மஞ்சு இருவரும் முதல் போட்டு தொழில் தொடங்கியது) | | 1,20,000 | <br>50,000<br>70,000 |

( எ.கா ) 2. ஜூலை 13, 2004 – சாந்தி என்பவரிடம் ₹.24,700 ரொக்கம் பெற்றுக் கொண்டு அவரின் கணக்கில் பெற வேண்டிய ₹.25,000 யை தீர்த்துக் கொண்டது.

₹.25,000 தரவேண்டிய தொகைக்கு ₹.24,700 பெற்றுக் கொண்டதால் ₹.300 தள்ளுபடி அளித்தது.

குறிப்பேடு

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்றுத்தொகை ₹. | வரவுத்தொகை ₹. |
|---|---|---|---|---|
| 2004 ஜூலை 13 | ரொக்க க/கு ப<br>அளித்ததள்ளுபடி க /கு ப<br>சாந்தி க/கு<br>(சாந்தி தன் கணக்கைத் தீர்த்துக் கொண்டார்) | | 24,700<br>300 | <br><br>25,000 |

எ.கா 3. ஜூலை 14, 2004 – தேன்மொழி என்பவருக்கு ₹.14,500 செலுத்தி அவருக்குத் தரவேண்டிய ₹.15,000 கணக்கைத் தீர்த்தது.

தேன்மொழிக்குச் செலுத்த வேண்டிய தொகை ₹.15,000, செலுத்தியது ₹. 14,500 தள்ளுபடி பெற்றது ₹.500.

குறிப்பேடு

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்றுத்தொகை ₹. | வரவுத்தொகை ₹. |
|---|---|---|---|---|
| 2004 ஜூலை 14 | தேன்மொழிக/கு ப<br>ரொக்க க/கு<br>தள்ளுபடி க/கு<br>(தேன்மொழி கணக்கைத்தீர்த்தத) | | 15,000 | <br>14,500<br>500 |

## தொடக்கப்பதிவு :

1. குறிப்பேட்டில் கீழ்க்கண்ட தொடக்கப் பதிவினைப் பதிவு செய்க.
   1. ரொக்கம் ₹.2,000 2. இயந்திரம் ₹.50,000 3. அறைகலன் ₹.5,000 4. கடனீந்தோர்கள் ₹.13,000 5. கடனாளிகள் ₹.18,000

தொடக்கப்பதிவு

| நாள் | விவரம் | பே. ப.எ | பற்றுத்தொகை ₹. | வரவுத்தகை ₹. |
|---|---|---|---|---|
| 2004 ஜூலை 14 | ரொக்கக/கு ப<br>இயந்திரம்க/கு ப<br>அறைகலன்க/கு ப<br>கடனாளிகள் க/கு ப<br>கடனீந்தோர் க/கு<br>முதல் க/கு<br>(இருப்புத்தொகை)<br>(சொத்துக்கள்மற்றும் பொறுப்புகள்கொணரப்பட்டது) | | 2,000<br>50,000<br>5,000<br>18,000 | <br><br><br><br>13,000<br>62,000 |

2. குறிப்பேட்டில் கீழ்க்கண்ட தொடக்கப் பதிவினைப் பதிவு செய்க.
   1. ரொக்கம் ₹.8,000 2. வங்கி ₹.60,000 3. அறைகலன் ₹.15,000 4. கடனீந்தோர்கள் ₹.51,000 5. கடனாளிகள் ₹.28,000 6. சரக்கிருப்பு ₹. 40,000

தொடக்கப்பதிவு

| நாள் | விவரம் | பே.ப. எ | பற்றுத்தொகை ₹. | வரவுத்தொகை ₹. |
|---|---|---|---|---|
| 2004 ஜூலை 14 | ரொக்கக/கு ப<br>வங்கிக/கு ப<br>அறைகலன்க/கு ப<br>கடனாளிகள் க/கு ப<br>சரக்கிருப்பு க/கு ப<br>கடனீந்தோர் க/கு<br>முதல் க/கு<br>(இருப்புத்தொகை)<br>(சொத்துக்கள்மற்றும் பொறுப்புகள்கொணரப்பட்டது) | | 8,000<br>60,000<br>15,000<br>28,000<br>40,000 | <br><br><br><br><br>51,000<br>1,00,000 |

www.Padasalai.Net

1. கீழ்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளுக்குரிய நடவடிக்கைகளைத் தருக.

அ. ரொக்கக/கு ப
அறைகலன்க/கு

ஆ. வாடகைக/கு ப
ரொக்கக/கு

இ. வங்கி க/கு ப
ரொக்கக/கு

ஈ. தமிழ்ச்செல்வி க/கு ப
விற்பனைக/கு

விடை : அ) அறைகலன் விற்றது ஆ) வாடகை செலுத்தியது இ) வங்கியில் செலுத்தியது
ஈ) தமிழ்ச்செல்விக்கு கடனாக சரக்கு விற்றது

2. தேவையெனக் கருதும் இடத்தில் சரியான பதிவுகளைத் தருக.

அ) தொழிலில் முதல் இட்டது.
முதல் க/கு ப
ரொக்கக் க/கு

அ. சரியான பதிவு
ரொக்க க / கு ப
முதல் க / கு
( தொழிலில் முதல் இட்டது )

ஆ) ரொக்கக் கொள்முதல்
ரொக்கக் க/கு ப
கொள்முதல் க/கு

ஆ. சரியான பதிவு
கொள்முதல் க/கு ப
ரொக்கக் க/கு
( ரொக்கக் கொள்முதல் )

இ) எழுத்தர் திரு. கன்னியப்பனுக்கு ஊதியம் வழங்கியது.
ஊதியம் க/கு ப
கன்னியப்பன் க/கு

இ. சரியான பதிவு
ஊதியம் க/கு ப
ரொக்கக் க/கு
( ஊதியம் வழங்கியது )

www.Padasalai.Net

ஈ) ஏற்றிச் செல் செலவுக்கு செலுத்தியது
ஏற்றிச் செல் செலவு க/கு ப
ரொக்கக் க/கு

3. கீழ்க்காணும் கணக்குகளில் தோன்றும் இருப்புகளைக் குறிப்பிடுக.

அ. ரொக்கம்
ஆ. கடனீந்தோர்
இ. விற்பனை
ஈ. அறைகலன்
உ. கழிவு பெற்றது
ஊ. கடனாளி
எ. கொள்முதல்
ஏ. முதல்
ஐ. ஊதியம் வழங்கியது
ஒ. கணினி

விடை

| பற்று இருப்புகள் | வரவு இருப்புகள் |
|---|---|
| அ. ரொக்கம்<br>ஈ. அறைகலன்<br>ஊ. கடனாளி<br>எ. கொள்முதல்<br>ஐ.ஊதியம்வழங்கியது<br>ஒ. கணினி | ஆ. கடனீந்தோர்<br>இ. விற்பனை<br>உ. கழிவு பெற்றது<br>ஏ. முதல் |

## கணக்கியல் சமன்பாடு ---- சார்ந்த கணக்குகள்

1 ) கீழ்க்காணும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கணக்கியல் சமன்பாட்டினைக் காட்டிடுக:

1. முருகன் தொழில் தொடங்க ரொக்கம் போட்டது ₹. 1,00,000
2. ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 50,000
3. கடன் கொள்முதல் செய்தது ₹. 30,000

**கணக்கியல் சமன்பாடு:**

| நடவடிக்கை | சொத்துகள் ரொக்கம் | + | சரக்கிருப்பு | = | முதல் | + | பொறுப்புகள் கடனீந்தோர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. முருகன் தொழில் தொடங்கியது | 1,00,000 | + | 0 | = | 1,00,000 | + | 0 |
| 2. ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | (-) 50,000 | + | 50,000 | = | 0 | + | 0 |
| 3. கடன் கொள்முதல் | 0 | + | 30,000 | = | 0 | + | 30,000 |
| சமன்பாடு | 50,000 | + | 80,000 | = | 1,00,000 | + | 30,000 |
| | ₹. 1,30,000 | | | = | ₹. 1,30,000 | | |

2 ) கீழ்க்காணும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கணக்கியல் சமன்பாட்டினைக் காட்டிடுக:

1. ரம்யா தொழில் தொடங்க ரொக்கம் போட்டது ₹. 25,000
2. சோபனாவிடமிருந்து சரக்கு கொள்முதல் செய்தது ₹. 20,000
3. அமலா ₹. 18,000 அடக்க விலை கொண்ட சரக்கு விற்றது ₹. 25,000
4. ரம்யா தொழிலிருந்துஎடுத்தது ₹. 5,000

**கணக்கியல் சமன்பாடு:**

| நடவடிக்கை | சொத்துகள் ரொக்கம் | + | சரக்கிருப்பு | = | முதல் | + | பொறுப்புகள் கடனீந்தோர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. ரம்யா தொழில் தொடங்கியது | 25,000 | + | 0 | = | 25,000 | + | 0 |
| 2. சோபனாவிடமிருந்து சரக்கு கொள்முதல் செய்தது | 0 | + | 20,000 | = | 0 | + | 20,000 |
| 3. அமலா ₹. 18,000 அடக்க விலை கொண்ட சரக்கு விற்றது | (+) 25,000 | | ( - ) 18,000 | = | ( + ) 7,000 | + | 0 |
| 4.ரம்யா தொழிலிலிருந்து எடுத்தது | ( - ) 5,000 | + | 0 | = | ( - ) 5,000 | + | 0 |
| சமன்பாடு | 45,000 | + | 2,000 | = | 27,000 | + | 20,000 |
| | ₹. 47,000 | | | = | ₹. 47,000 | | |

3 ) கீழ்க்காணும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கணக்கியல் சமன்பாட்டினைக் காட்டிடுக:

1. பாலா தொழில் தொடங்க ரொக்கம் போட்டது ₹. 50,000
2. கடன் கொள்முதல் செய்தது ₹. 30,000
3. ரொக்க கொள்முதல் ₹. 20,000
4. அறைகலன் வாங்கியது ₹. 10,000
5. ஊதியம் வழங்கியது ₹. 12,000

**கணக்கியல் சமன்பாடு:**

| நடவடிக்கை | சொத்துகள் | | | | | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரொக்கம் | + | சரக்கிருப்பு | + | அறைகலன் | = | முதல் | + | கடனீந்தோர் |
| 1. பாலா தொழில் தொடங்கியது | 50,000 | + | 0 | + | 0 | = | 50,000 | + | 0 |
| 2. கடன் கொள்முதல் | 0 | + | 30,000 | + | 0 | = | 0 | + | 30,000 |
| 3. ரொக்க கொள்முதல் | (-) 20,000 | + | 20,000 | + | 0 | = | 0 | + | 0 |
| 4. அறைகலன் வாங்கியது | (-) 10,000 | + | 0 | + | 10,000 | = | 0 | + | 0 |
| 5. ஊதியம் வழங்கியது | (-) 12,000 | + | 0 | + | 0 | = | (-) 12,000 | + | 0 |
| சமன்பாடு | 8,000 | + | 50,000 | + | 10,000 | = | 38,000 | + | 30,000 |
| | | | ₹. 68,000 | | | = | ₹. 68,000 | | |

4 ) கீழ்க்காணும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கணக்கியல் சமன்பாட்டினைக் காட்டிடுக:

| | | |
|---|---|---|
| 1. | மகேஷ் தொழில் தொடங்க ரொக்கம் போட்டது | ₹. 75,000 |
| 2. | ₹. 12,000 அடக்க விலை கொண்ட சரக்கினை விற்றது | ₹. 15,000 |
| 3. | ₹. 25,000 அடக்க விலை கொண்ட சரக்கினை கடனாக விற்றது | ₹. 28,000 |
| 4. | வாடகை செலுத்தியது | ₹. 5,000 |

**கணக்கியல் சமன்பாடு:**

| நடவடிக்கை | சொத்துகள் | | | | | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரொக்கம் | + | சரக்கிருப்பு | + | கடனாளி | = | முதல் | + | கடனீந்தோர் |
| 1. மகேஷ் தொழில் தொடங்கியது | 75,000 | + | 0 | + | 0 | = | 75,000 | + | 0 |
| 2. ரொக்க விற்பனை ₹.15,000 அடக்க விலை₹. 12,000 | (+) 15,000 | (-) | 12,000 | + | 0 | = | (+) 3,000 | + | 0 |
| 3. கடன் விற்பனை ₹.28,000 அடக்க விலை ₹.25,000 | 0 | (-) | 25,000 | + | 28,000 | = | ( + ) 3,000 | + | 0 |
| 4. வாடகை செலுத்தியத் | ( - ) 5,000 | + | 0 | + | 0 | = | ( - ) 5,000 | + | 0 |
| சமன்பாடு | 85,000 | (-) | 37,000 | + | 28,000 | = | 76,000 | + | 0 |
| | | | ₹. 76,000 | | | = | ₹. 76,000 | | |

## பாடம் 6 துணை ஏடுகள் I - சிறப்பு நோக்க ஏடுகள்

நாளேடு வகைகளின் மாதிரிப் படிவம்:

**கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹ | மொத்தம் ₹ | |
| | | | | | | |

**குறிப்பு** : 1. கடனுக்கு வாங்கப்படும் சரக்குகள் அனைத்தும் கொள்முதல் ஏட்டில் பதியப்படும்.

2. ரொக்கத்திற்கு சரக்கு வாங்குதல், சொத்துகளை கடனுக்கு மற்றும் ரொக்கத்திற்கு வாங்குதல் இதில் பதியப்படுவது இல்லை.

http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெளிச்செல் இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹ | மொத்தம் ₹ | |
| | | | | | | |

**குறிப்பு** : 1. கடனுக்கு விற்கப்படும் சரக்குகள் அனைத்தும் விற்பனை ஏட்டில் பதியப்படும்.

2. ரொக்கத்திற்கு சரக்கு விற்றல் இதில் பதியப்படுவது இல்லை. இதைப்போன்றே சொத்துகளை கடனுக்கு விற்றல் மற்றும் ரொக்கத்திற்கு விற்றல் இதில் பதியப்படுவது இல்லை

## கொள்முதல் திருப்ப ஏடு

| நாள் | விவரம் | பற்று குறிப்பு எண் | பே.ப.எ | தொகை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹ | மொத்தம் ₹ | |
| | | | | | | |

## விற்பனை திருப்ப ஏடு

| நாள் | விவரம் | வரவு குறிப்பு எண் | பே.ப.எ | தொகை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹ | மொத்தம் ₹ | |
| | | | | | | |

www.Padasalai.Net

# பாடம் 7. துணை ஏடுகள் II - ரொக்க ஏடு

## தனிப்பத்தி ரொக்க ஏடு மாதிரி படிவம்:

ப " ------------ " அவர்களின் தனிப்பத்தி ரொக்க ஏடு வ

| நாள் | விவரம் | இரசீது எண் | பே.ப. எண் | தொகை ₹ | நாள் | விவரம் | சான்று சீட்டு எண் | பே.ப.எண் | தொகை ₹ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

**குறிப்பு** : கடன் நடவடிக்கை இந்த ரொக்க ஏட்டில் பதிவதில்லை

## இருபத்தி ரொக்க ஏடு:

அ) தள்ளுபடி மற்றும் ரொக்கம் பத்திகளுடய ரொக்க ஏடு

ப " ------------ " அவர்களின் இருபத்தி ரொக்க ஏடு வ

| நாள் | விவரம் | இ.எ | பே.ப.எண் | அளித்த தள்ளுபடி ₹ | தொகை ₹ | நாள் | விவரம் | சா.சீ.எ | பே.ப.எ | பெற்ற தள்ளுபடி ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

ஆ) <u>ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடய ரொக்க ஏடு</u>

ப “ ------------ “ அவர்களின் இருபத்தி ரொக்க ஏடு வ

| நாள் | விவரம் | இ.எ | பே.ப.எண் | ரொக்கம் ₹ | வங்கி ₹ | நாள் | விவரம் | சா.சீ.எ | பே.ப.எ | ரொக்கம் ₹ | வங்கி ₹ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

<u>குறிப்பு</u> : 1. பற்றுப் பக்கத்தில் ரொக்கப் பெறுதல்களுக்காகவும், வங்கியில் செலுத்தப்படும் தொகைக்காகவும் இரு பத்திகள் உள்ளன.

2. இதைப் போன்றே வரவுப் பக்கத்தில் முறையே ரொக்க செலுத்தல்களுக்காகவும், காசோலை செலுத்தல்களுக்காகவும் இரு பத்திகள் உள்ளன.

இ) <u>முப்பத்தி ரொக்க ஏடு</u> :

ப “ ------------ “ அவர்களின் முப்பத்தி ரொக்க ஏடு வ

| நாள் | விவரம் | இ.எ | பே.ப.எ | அளித்த தள்ளுபடி ₹ | ரொக்கம் ₹ | வங்கி ₹ | நாள் | விவரம் | சா.சீ.எ | பே.ப.எ | பெற்ற தள்ளுபடி ₹ | ரொக்கம் ₹ | வங்கி ₹ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

www.Padasalai.Net

<u>குறிப்பு</u> : 1. பற்றுப் பக்கத்தில் அனைத்து ரொக்கப் பெறுதல்கள், வங்கியில் பணம் செலுத்துதல் மற்றும் அளித்த தள்ளுபடி ஆகியன பதியப்படுகின்றன.

2. வரவுப் பக்கத்தில் அனைத்து ரொக்கச் செலுத்தல்கள், வங்கியிலிருந்து பணம் எடுத்தல் மற்றும் பெற்ற தள்ளுபடி ஆகியன பதியப்படுகின்றன.

## <u>பாடம் - 8 துணை ஏடுகள் III -- சில்லறை ரொக்க ஏடு</u>

” ---------------- ”அவர்களின் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏடு

ப வ

| பெற்ற தொகை ரூ | ரொக்க ஏட்டின் பக்க எண் | நாள் | விவரம் | சான்றுசீட்டு எண் | மொத்தம் செலவழித்த தொகை ரூ | அஞ்சலும், தந்தியும் ரூ | அச்சுக்கூலி & எழுதுபொருள் ரூ | ஏற்றிச் செல் செலவு ரூ | பயணச்செலவு ரூ | அலுவலக செலவு &பழுதுபார்ப்புச் செலவு | பல்வகைச் செலவு ரூ | பே.ப.எ | ஆள்சார் கணக்குகள் ரூ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

# பாடம் 9 வங்கி சரிகட்டும் பட்டியல்

## " --------------------- "நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியல்

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|
| அ. ரொக்க ஏட்டின்படி இருப்பு | | Xxxx |
| ஆ. கூட்டுக : | | |
| 1. காசோலை நாம் விடுத்தும், பணம் பெற வங்கியால் முன்னிலைப்படுத்தப் படாதவை / விடுத்த காசோலை பணமாக்கப் படாதது | Xxxx | |
| 2. வங்கி அளித்த / அனுமதித்த / வசூலித்த வட்டி, ஆனால் ரொக்க ஏட்டில் பதியப்படாதது | Xxxx | |
| 3. வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியவை ஆனால் ரொக்க ஏட்டில் பதியப்படாதவை | Xxxx | |
| 4. வங்கியர் தவறுதலாக செய்த வரவு | Xxxx | |
| 5. வாடிக்கையாளரின் நிலை ஆணையின்படி,வங்கியர் வசூலித்தவை | Xxxx | |
| 6. பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு வசூலானது, ரொக்க ஏட்டில் பதியப்படாதவை | Xxxx | |
| 7. முதலீடு மீதான வட்டி வசூலானது, ஆனால் ரொக்க ஏட்டில் பதியப்படாதவை | Xxxx | |
| மொத்தம் (ஆ) | | Xxxx |
| இ. மொத்தம் (அ+ஆ) | | Xxxx |
| ஈ. கழிக்க : | | |
| 1. வங்கியில் வைப்பு செய்த காசோலை வங்கியால் வரவு வைக்கப்படாதவை | Xxxx | |
| 2. செல்லேட்டி உள்ள மறுக்கப்பட்ட காசோலைகள் ஆனால் ரொக்க ஏட்டில் பதியப்படாதவை | Xxxx | |
| 3. செல்லேட்டின்படியான வங்கிக் கட்டணம் | Xxxx | |
| 4. வங்கியர் தவறுதலாக செய்த பற்று | Xxxx | |
| 5. நிலை ஆணையின்படி செலுத்தியவை | Xxxx | |
| 6. வங்கியால் நேரடியாக செலுத்தப்பட்ட தொகை ( உ.ம். காப்பீட்டு முனைமம் ) | Xxxx | |
| 7. பெறுதற்குரிய மாற்ருச்சீட்டு, வங்கியால் வசூலிக்கப்பட்டவை | Xxxx | |
| 8. வங்கி கட்டணம் | Xxxx | |
| மொத்தம் (ஈ) | | Xxxx |
| உ. செல்லேட்டின் படி இருப்பு ( இ-ஈ ) | | Xxxx |

www.Padasalai.Net

# பாடம் 10 . இருப்பாய்வும் பிழைத் திருத்தமும்

## “ ------------------ “ ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | xxxx |
| 2 | விற்பனை | | | xxxx |
| 3 | பற்பலகடனீந்தோர் | | | xxxx |
| 4 | கொள்முதல் திருப்பம் / வெளித்திருப்பம் | | | xxxx |
| 5 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | xxxx |
| 6 | பெற்ற வட்டி | | | xxxx |
| 7 | பெற்ற கழிவு / ஈட்டிய கழிவு | | | xxxx |
| 8 | பெற்ற தள்ளுபடி | | | xxxx |
| 9 | பெற்ற கடன் (or) கடன் ( வரவு ) | | | xxxx |
| 10 | காப்பு நிதி | | | xxxx |
| 11 | வங்கி மேல்வரைப் பற்று | | | xxxx |
| 12 | வங்கிக் கடன் | | | xxxx |
| 13 | வாராஜயக்கடன் ஒதுக்கு | | | xxxx |
| 14 | ஊதியம் | | xxxx | |
| 15 | பொறி, இயந்திரம் | | xxxx | |
| 16 | அறைகலன் | | xxxx | |
| 17 | பற்பல கடனாளிகள் | | xxxx | |
| 18 | தொடக்கச் சரக்கிருப்பு | | xxxx | |
| 19 | கொள்முதல் | | xxxx | |
| 20 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | xxxx | |
| 21 | அளித்த ( செலுத்திய) வட்டி | | xxxx | |
| 22 | செலுத்திய கழிவு, அளித்ததள்ளுபடி | | xxxx | |
| 23 | விற்பனை திருப்பம் / உள்திருப்பம் | | xxxx | |
| 24 | வாடகை, வரிகள் | | xxxx | |
| 25 | கை ரொக்கம், வங்கிரொக்கம் | | xxxx | |
| 26 | வாராக் கடன் | | xxxx | |
| 27 | காப்பீடு | | xxxx | |
| 28 | பயணச் செலவுகள் | | xxxx | |
| 29 | சில்லறைச் செலவுகள் | | xxxx | |
| 30 | உள் ஏற்றிச்செல் செலவு, வெளி ஏற்றிச்செல் செலவுகள் | | xxxx | |

குறிப்பு : 1. பற்று இருப்பு என்பது ஒரு சொத்து அல்லது செலவு அல்லது நட்டம் ஆகும்

2. வரவு இருப்பு என்பது ஒரு பொறுப்பு அல்லது வரவு அல்லது ஆதாயம் ஆகும்.

( இருப்பாய்வில் தோன்றும் வேற்றுமைத் தொகை, அநாமத்துக் கணக்குக்கு மாற்றப்படுகிறது )

http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

www.Padasalai.Net

# பிழைகள் திருத்துதலின் அடிப்படை கோட்பாடுகள்

பெரும்பாலான பிழைகள் கீழ்க்கண்ட நான்கு நிலைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகளில் ஒன்றாக இருக்கலாம்.

1. மிகைப் பற்று : உரிய கணக்கில் மிகைத் தொகையை வரவு வைத்து திருத்தப்பட வேண்டும்.
2. குறைப் பற்று : உரிய கணக்கில் குறைந்த தொகையை தொடர்ந்து மேலும் பற்று வைத்து சரிப்படுத்தலாம்.
3. மிகை வரவு : உரிய கணக்கில் மிகைத் தொகையை பற்று வைத்து திருத்தப்பட வேண்டும்.
4. குறை வரவு : உரிய கணக்கில் குறைந்த தொகையை மேலும் வரவு வைத்து சரிப்படுத்தலாம்.

அதாவது,

1. **மிகைப் பற்று** எனில் ------- **வரவில்** வைத்து திருத்தவும்.
2. **குறைப் பற்று** எனில் -------- **பற்றிலே** வைத்து திருத்தவும்.
3. **மிகை வரவு** எனில் -------- **பற்றில்** வைத்து திருத்தவும்.
4. **குறை வரவு** எனில் --------- **வரவில்** வைத்தே திருத்தவும்.

1. கீழ்க்காணும் பிழைகளைத் திருத்துக.

1. கொள்முதல் ஏடு ₹.1,300 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
2. விற்பனை ஏடு ₹. 2,500 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
3. கொள்முதல் திருப்ப ஏடு ₹.750 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
4. விற்பனைத் திருப்ப ஏடு ₹. 600 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

www.Padasalai.Net

விடை :

1. கொள்முதல் கணக்கில் ₹.1,300 வரவு வைக்கப்பட வேண்டும்.
2. விற்பனைக் கணக்கில் ₹. 2,500 மேலும் வரவு வைக்கப்பட வேண்டும்.
3. கொள்முதல் திருப்பக் கணக்கில் ₹.750 பற்று வைக்கப்பட வேண்டும்.
4. விற்பனைத் திருப்பக் கணக்கில் ரூ. 600 மேலும் பற்று வைக்கபட வேண்டும்.

கொள்முதல் ----- பற்று இருப்பு ; கொள்முதல் திருப்பம் ------ வரவு இருப்பு
விற்பனை ----- வரவு இருப்பு ; விற்பனை திருப்பம் ------- பற்று இருப்பு

2. பின்வரும் பிழைகளைத் திருத்துக.

1. கொள்முதல் ஏட்டின் மொத்தம் ரூ. 850 குறைவாக தூக்கி எழுதப்பட்டுள்ளது.
2. விற்பனை ஏட்டின் மொத்தம் ரூ. 2,500 அதிகமாக தூக்கி எழுதப்பட்டுள்ளது.
3. கொள்முதல் ஏட்டின் மொத்தம் ரூ. 7,580, ரூ. 8,570 என தூக்கி எழுதப்பட்டுள்ளது.
4. விற்பனை ஏட்டின் மொத்தம் ரூ. 7,550 20ஆம் பக்கத்திலிருந்து 21ஆம் பக்கத்திற்கு ரூ. 5,570 என தூக்கி எழுதப்பட்டுள்ளது.
5. கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தம் ரூ. 5,120, ரூ. 1,520 என தூக்கி எழுதப்பட்டுள்ளது.

விடை :

1. கொள்முதல் கணக்கில் ரூ. 850 பற்று வைக்க வேண்டும்.
2. விற்பனைக் கணக்கில் ரூ. 2,500 பற்று வைக்க வேண்டும்.
3. கொள்முதல் கணக்கில் ரூ. 990 வரவு வைக்க வேண்டும். (ரூ. 8,570 - ரூ. 7,580)

4. விற்பனைக் கணக்கில் ரூ. 1,980 வரவு வைக்க வேண்டும். (ரூ. 7,550 - ரூ. 5,570)
5. கொள்முதல் திருப்பக் கணக்கில் ரூ. 3,600 வரவு வைக்க வேண்டும். (ரூ. 5,120 - ரூ. 1,520)

## பாடம் - 11 முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்

**முதலினச் செலவினம் :**

நீண்ட காலத்திற்கு பயன்படுத்தும் சொத்துகள், பொருள்கள் வாங்கும் செலவுகள் முதலினச் செலவுகள் எனப்படும். இது ஒரு தொடராச் செலவினம் ஆகும்.

சிறப்பியல்புகள் :

இச்செலவுகள்

1. நிலைச் சொத்துகளை வாங்குதல்.
2. நிலைத் சொத்தின் மதிப்பை மேலும் அதிகப்படுத்தல்.
3. தொழிலில் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்தல்.
4. திரும்பத் திரும்ப நிகழாச் செலவுகள்.
5. விற்பனைக்கு அல்லாதவைகள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்கும்.

எடுத்துக்காட்டுகள் :

1. நிலம், கட்டடம், பொறிவகை, அறைகலன், சீருந்து, நற்பெயர், பதிப்புரிமை, வணிகக்குறி, காப்புரிமை ஆகியவற்றை வாங்குச் செலவுகள்
2. திரையரங்கின் இருப்பிடங்களைப் பெருக்குவதற்கானச் செலவுகள்
3. நிலைச் சொத்துக்களை நிர்மானிக்க ஆகும் செலவுகள்
4. கட்டடம் மற்றும் இயந்திரங்களைப் புதுப்பித்தல்

மேலும் புரிதலுக்கு,

1. தொழில் நடத்த உரிமை பெற / காப்புரிமை பெற செலவு செய்வது.
2. இயந்திரத்தின் செயல்பாட்டைக் கூட்ட செலவு செய்வது.
3. உற்பத்தி விலையைக் குறைக்க செலவு செய்வது.
   ( உ.ம் ) பெட்ரோல் என்ஜினுக்கு பதிலாக, டீசல் என்ஜினை மற்ற செலவு செய்வது.
4. அடக்க விலையைக் குறைக்க செலவு செய்வது.
   ( உ. ம் ) மின்சாரப் பயன்பாட்டைக் குறைக்க புதிய வகை இயந்திரத்தை மாற்றுவது.
5. பழுதடைந்த இயந்திரத்தின் ஒரு பகுதியை மாற்றுவதற்காணச் செலவு செய்வது.
6. புதிதாக வாங்கிய சொத்துகளை ( இயந்திரம்) நிறுவ வேலை ஆட்களுக்கு கூலி கொடுத்தது.
7. கடன் பெற சட்டமுறைச் செலவு செய்வது.

www.Padasalai.Net

**முதலின வரவுகள் :**

நீண்ட காலத்திற்குப் பயன்படும் வகையில் தொழிலில் முதலீடு செய்வது முதலின வரவு ஆகும். இதில் பிறரிடம் பெற்ற நீண்ட காலக் கடன்கள் மற்றும் நிலைச்சொத்துகள் விற்பதின் மூலம் கிடைக்கும் தொகை ஆகியனவும் அடங்கும். இவை தொடராத் தன்மை கொண்டவை ஆகும்.

சிறப்பியல்புகள்

1. நிறுவனத்தின் நடைமுறை வரவாக இல்லாமல் இருத்தல்.
2. அடிக்கடி நிகழாத் தன்மைக் கொண்டது.

எடுத்துக்காட்டுகள்

1. உரிமையாளர் தொழிலில் இடும் முதல்
2. கடன்கள்
3. நிலைச் சொத்து விற்பது.

## வருவாயினச் செலவுகள் :

நிறுவனத்தின் அன்றாடச் செயல்பாடுகளுக்கு வழங்கும் தொகை வருவாயினச் செலவுகள் எனப்படும். தொழிலின் வருவாய் ஈட்டும் திறனைத் தக்க வைத்துக்கொள்ளச் செலவிடுவதும் ஆகும். நிலைச்சொத்துகளை பாதுகாத்துக் கொள்ளவும் பயன்படுகிறது. இது தொடர் தன்மையினதாகும்

### சிறப்பியல்புகள் :

1. தொழில் நிறுவனத்தின் வருவாய் ஈட்டும் திறனைக் காத்துக் கொள்ள உதவுகிறது.
2. திரும்பத் திரும்ப நிகழும் தன்மை கொண்டது.

எடுத்துக்காட்டுகள் :

1. மறுவிற்பனைக்காக பொருள்கள் வாங்கும் செலவு.
2. அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள்
3. விற்பனை மற்றும் பகிர்மானச் செலவுகள்
4. நிலைச் சொத்துக்களின் தேய்மானம், கடன்களின் மீதான வட்டி முதலியன.
5. பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள்.

மேலும் புரிதலுக்கு,

1. விற்பனை செய்ய வேண்டிய சரக்கினை அதாவது கொள்முதல் செய்த சரக்கினை கொண்டு வர ஆகும் செலவு.
2. ஓர் ஆண்டிற்கான நடைமுறை செலவு செய்வது.
   ( உ.ம் ) காப்பீட்டு முனைமம் செலுத்துவது.
3. பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவது.
   ( உ.ம் ) மேலாளர் மற்றும் தொழிலாளிகளுக்கு வழங்கும் ஊதியம்.
4. சொத்துகளை பராமரிக்க செலவு செய்வது.
   ( உ.ம் ) பொறிவகைகளை பழுது பார்ப்பது.
5. வழக்கமான செலவுகளுக்கு செலவு செய்வது.
   ( உ.ம் ) மின்கட்டணம், தொலைப்பேசி கட்டணம் செலுத்துவது.
6. சீருந்து,பேருந்து பாகங்களை மாற்ற செலவு செய்தது.
   ( உ. ம் ) லாரிகளுக்கு டயர் மாற்றுவது.
7. நிறுவனத்தின் அன்றாடச் செயல்களுக்கு செலவு செய்வது.
   ( உ.ம் ) பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களை வாங்குவது.
8. உள்தூக்கி கூலி கொடுப்பது.
9. இதழ்களுக்கு சந்தா செலுத்துவது.
10. கட்டடங்களுக்கு வெள்ளை அடிக்க, பெயிண்ட் அடிக்க செலவு செய்வது.

www.Padasalai.Net

## வருவாயின வரவுகள் :

தொழிலின் நடவடிக்கைகள் மூலம் ஈட்டும் வருமானங்கள் வருவாயின வரவுகள் எனப்படும். இது தொடர்ந்து நிகழும் தன்மையினதாகும்.

### சிறப்பியல்புகள் :

1. தொழிலின் அன்றாட நடவடிக்கைகளில் பெறுவது.
2. தொடரும் தன்மை கொண்டது.

எடுத்துக்காட்டுகள் :

1. பண்டங்கள் மற்றும் பணிகள் விற்பனை.
2. கழிவு மற்றும் தள்ளுபடி பெற்றது.
3. பங்காதாயம், முதலீடுகள் மீதான வட்டி ஆகியவை.

மேலும் புரிதலுக்கு,

1. முதலீடுகள் மீதான வருமானம்.
   ( உ.ம் ) முதலீடு செய்த பங்ககளில் இருந்து பங்காதாயம் பெறுவது.
2. வழக்கமாக செய்யும் தொழிலில் இருந்து வருமானம் பெறுவது.
   ( உ.ம் ) ரூ. 6,500 அடக்க விலை கொண்ட புடவையை ரூ.8,000 க்கு விற்பது.
3. வாடகை பெறுவது.

http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

## நீள் பயன் வருவாயினச் செலவுகள் :

பேரளவில் செய்த ஒரு வருவாயினச் செலவு அதன் பயனை அந்த நடப்பு ஆண்டிலேயே நுகரப்படாமல், வரும் பல ஆண்டுகளில் அதன் பயனை நுகரக் கூடியவையாக இருப்பின், அச்செலவு நீள் பயன் வருவாயினச் செலவு எனக்கூறலாம்.

### சிறப்பியல்புகள் :

1. ஒரு ஆண்டுக்கு மேலும் பயன் தரவல்லது.
2. திரும்பத் திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.

### எடுத்துக்காட்டுகள் :

1. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான செலவுகள்
2. எதிர்பாராமல் தீ மற்றும் இடி மின்னல்களினால் ஏற்படும் பேரிழப்பு
3. விளம்பரத்திற்கு அதிகச் செலவிடுதல்.

---

1. கீழ்க்காண்பவை முதலினச் சார்ந்ததா அல்லது வருவாயினத்தைச் சார்ந்ததா என குறிப்பிடுக.
   1. பழைய எந்திரத்தை வாங்கியவுடன் பழுது பார்த்தது.
   2. புதிய எந்திரத்தை நிறுவ வேலையாள்களுக்கு கூலி கொடுத்தது.
   3. பழைய அறைகலனை எடுத்துவிட்டு புதிய அறைகலன் போட்டது.
   4. பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கியது.
   5. வாடகை பெற்றது.

விடை:
முதலினச் செலவு - 1), 2), 3)
வருவாயினச் செலவு - 4)
வருவாயின வரவு - 5)

www.Padasalai.Net

---

2. பின்வருவன முதலினத்தைச் சார்ந்ததா, வருவாயினத்தைச் சார்ந்ததா என வகைப்படுத்துக.
   1. கொள்முதல் செய்ததற்கு உள் தூக்குக் கூலி கொடுத்தது.
   2. கடன் பெற சட்டமுறைச் செலவு செய்தது.
   3. கட்டடப் பராமரிப்புச் செலவு
   4. ரூ. 40,000 அடக்கவிலை முதலீடுகள் வாங்கி ரூ. 50,000 க்கு விற்றது.
   5. வெள்ளை அடிக்கச் செலவு செய்தது ரூ. 1,000

விடை :
முதலினச் செலவு - 2)
வருவாயினச் செலவு - 1), 3), 5)
முதலின இலாபம் - 4)

---

3. கீழ்க்காணும் செலவுகள், முதலினத்தைச் சார்ந்ததா, வருவாயினத்தைச் சார்ந்ததா என வகைப்படுத்துக.
   1. நிலம் வாங்கியதற்கான பதிவுச் செலவு
   2. வாங்கிய பழைய கட்டடத்தைப் புதுப்பிக்க செலவு செய்தது.
   3. பழைய அறைகலன் விற்றதன் மூலம் கிடைத்த இலாபம்

விடை :
முதலினச் செலவு - 1), 2)
முதலின இலாபம் - 3)

## " ----------- " ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வியாபாரக் கணக்கு

பற்று வரவு

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| 1. தொடக்கச் சரக்கிருப்பு | | xxxx | விற்பனை | Xxxx | |
| 2. கொள்முதல் | Xxxx | | கழிக்க :விற்பனைத் திருப்பம் | Xxxx | |
| கழிக்க : கொள்முதல் திருப்பம் | Xxxx | xxxx | | | Xxxx |
| 3. கூலி | | xxxx | இறுதிச் சரக்கிருப்பு | | Xxxx |
| 4. உள்தூக்கு கூலி | | xxxx | | | |
| 5. உள் ஏற்றிச்செல் செலவு | | xxxx | | | |
| 6. மின்சக்தி, எரி வாயு | | xxxx | | | |
| 7. நுழைவு வரி | | xxxx | | | |
| 8. மொத்த இலாபம் கீ / இ ( இலாப நட்ட கணக்கிற்கு மாற்ற வேண்டியது ) | | xxxx | | | |
| | | xxxx | | | xxxx |

## " ----------- " ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட கணக்கு

www.Padasalai.Net

பற்று வரவு

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| 1.வெளித்தூக்கு கூலி / வெளி ஏற்றிச்செல் செலவு | | xxxx | 1.மொத்த இலாபம் கீ / கொ | | Xxxx |
| 2. சம்பளம் | | xxxx | 2. பெற்ற கழிவு | | Xxxx |
| 3. வாடகை , வரிகள் | | xxxx | 3. பெற்ற வாடகை | | Xxxx |
| 4. விளம்பரம் | | xxxx | 4. பெற்ற தள்ளுபடி | | Xxxx |
| 5. பயணச்செலவுகள் | | xxxx | 5. பெற்ற வட்டி | | Xxxx |
| 6. எழுதுபொருள்கள் | | xxxx | 6. முதலீடுகள் மீது வருமானம் | | Xxxx |
| 7. அஞ்சல் செலவுகள் | | xxxx | 7. எடுப்பு மீடு வட்டி | | Xxxx |
| 8. அளித்த தள்ளுபடி | | xxxx | | | |
| 9. செலுத்திய கழிவு | | xxxx | | | |
| 10. வாராக்கடன் | | xxxx | | | |
| 11. காப்பீடு | | xxxx | | | |
| 12. முதல் மீது வட்டி | | xxxx | | | |
| 13. தேய்மானங்கள் | | xxxx | | | |
| 14. நிகர இலாபம் ( முதல் கணக்கிற்கு மாற்ற வேண்டியது ) | | xxxx | | | |
| | | Xxxx | | | xxxx |

http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

“ ----------- “ ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| 1.முதல் | xxxx | | 1.கை ரொக்கம் | | xxxx |
| கழிக்க : எடுப்பு ( அ ) எடுப்பு மீது வட்டி (அ) வருமான வரி | xxxx | | 2.வங்கியில்ரொக்கம் | | xxxx |
| | xxxx | | 3. முதலீடுகள் | | xxxx |
| கூட்டுக: முதல் மீது வட்டி | xxxx | | 4. பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | xxxx |
| கூட்டுக: நிகர இலாபம் | xxxx | | 5.பற்பலகடனாளிகள் | | xxxx |
| | | xxxx | 6.நிலம்,கட்டடம் | | xxxx |
| 2. பற்பல கடனீந்தோர் | | xxxx | 7. அறைகலன் | | xxxx |
| 3.செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | xxxx | 8. இயந்திரம் | | xxxx |
| 4. வங்கி மேல்வரைப்பற்று | | xxxx | 9.வணிக வளாகம் | | xxxx |
| 5. பெற்ற கடன் ,அடமான கடன் | | xxxx | 10.புனை உரிமைகள் | | xxxx |
| 6. காப்பு நிதி | | xxxx | 11.வணிகக் குறிகள் | | xxxx |
| 7. கொடுபடவேண்டிய கூலி | | xxxx | 12. நற்பெயர் | | xxxx |
| 8. கொடுபடவேண்டிய வாடகை | | xxxx | 13. முன் கூட்டி செலுத்தியசெலவுகள் | | xxxx |
| 9. கொடுபடவேண்டிய செலவுகள் | | xxxx | 13.இறுதிச்சரக்கிருப்பு | | xxxx |
| | | xxxx | | | |
| 10.முன்கூட்டிப் பெற்ற கழிவு | | xxxx | | | |
| | | xxxx | | | xxxx |

B. பாலாஜி,
முதுகலை ஆசிரியர் - வணிகவியல்,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
பரந்தூர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 552.
கைப்பேசி எண் : 9629647613

www.Padasalai.Net